திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : தலைவர் அவர்களே, கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக வேண்டி இம்மாதிரி ஹையர் கிரேட் 'ஷார்ட் கோர்ஸ்' கொடுக்கப்படுமா, அதை அரசு கவனிக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது ஹையர் கிரேட் ஆசிரியர்கள் வேலை பார்க்க வேண்டிய இடத்தில் செக்கண்டரி கிரேட் ஆசிரியர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். ஆனால் பொதுவாக ஹயர்கிரேட், செக்கண்டரி கிரேட் என்று இல்லாமல் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கு அவர்கள் அந்த வேலையை ஏற்றுக்கொண்டதற்கு பின்னாலே கூட ஒரு பயிற்சி கொடுத்தால் நல்லது என்ற கருத்தை ஏற்றுக்கொண்டு, சில மாவட்டங்களிலே அதை ஆரம்பித்திருக்கிறோம். மாநிலம் முழுவதும் அப்படிப்பட்ட இன்-ஸர்வீஸ் டிரெயினிங்" கொடுக்க அரசாங்கம் யோசித்து வருகிறது.

திரு. முனு. ஆதி : தலைவர் அவர்களே, செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் ஹையர் கிரேட் இடத்திலே வேலை செய்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்களுக்குள்ள சம்பளத்தை ஒரே நிலையிலே ஹையர் கிரேட், செக்கண்டரி கிரேட் ஆசிரியர்கள் இரு சாராருக்கும் ஒரே அடிப்படையில் வைக்கும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஹையர் கிரேட் படித்தால் அந்தப் படிப்புக்கு ஏற்ற சம்பளம் தான் பெற வேண்டும். ஆனால் செக்கண்டரி கிரேட் படித்தவர்கள் ஹையர் கிரேடிலே வேலை பார்க்கிறார்கள் என்ற குறை இருந்த காரணத்தால் நாம் ஒரு ..பேஸ்டு புரோகிராமாகத் திட்டமிட்டு, ஆண்டுதோறும் அப்படிப்பட்ட வேலையையும் கொடுத்து சம்பளத்தையும் உயர்த்துகிறோம். இன்னும் சில காலத்திலே சரியாகிவிடும் என்று நம்புகிறேன்.

திரு. கே. பி. எஸ். மணி : ஐயா, இப்பொழுது ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிகமான ஆசிரியர்கள் தேர்ச்சி பெற்று வேலை இல்லாமல் கஷ்டப்படுகிறார்களே, அதை யொட்டி, அந்த ஆசிரியர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை 'செலக்ஷன்-டிரெய்னிங்' நடத்த அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நமக்கு எவ்வளவு ஆசிரியர்கள் வேண்டுமென்று நாம் ஆண்டு தோறும் திட்டம் இடுகின்றோம். ஐந்தாண்டுத் திட்டத்திலே அது கணிக்கப்படுகிறது. திட்டமிட்டவாறு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் இடம் ஒதுக்குகிறோம். இப்பொழுதே சில இடம் தரப்படுகிறது. இன்னும் தேவையையொட்டி அப்பொழுதைக்கப்பொழுது பரிசீலித்து எந்த எந்தப் பயிற்சியைக் குறைக்க வேண்டுமோ அவ்வப்பொழுது அவை குறைக்கப்படும்.

***426 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether the higher grade teachers are paid an annual increment of Re. 1 as against Rs. 4 for the Secondary Grade Teachers ?**

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம்.

DR. H. V. HANDE : Sir, has any representation been made to increase the annual increment of Re. 1 by more than one rupee at least two rupees,—and also what is the total number of higher grade elementary school teachers in our State and what is the extra amount that is going to be spent by the Government if they are to accede to the request of those teachers ? Have the Government worked out the figures and have the Government examined the whole matter ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : யாரும் அதைப் பற்றிக் கோரிக்கை தந்திருப்பதாக என்னிடத்திலே தகவல் இல்லை. ஆனால் இதை நாமாக ஏற்படுத்தவில்லை. 1960-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட "பே கமிஷன்," இப்படி ஒரு முடிவு எடுத்தது. ஹையர் கிரேட் டீச்சர்ஸ், செக்கண்டரி கிரேட் டீச்சர்ஸ் ஒவ்வொருவருக்கும் என்ன 'பே ஸ்கேல்ஸ்' என்று அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் கொடுத்திருக்கின்ற இன்கிரிமெண்டை நாம் கொடுத்து வருகிறோம். அதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமானால் அடுத்த 'பே கமிஷன்' தான் மறு பரிசீலனை செய்ய வேண்டும்.

திரு. எம். சுரேந்திரன் : இடைநிலைப் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளைவிட ஆரம்பநிலைப் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளைக் கட்டுப்படுத்தி படிப்புச் சொல்லிக்கொடுப்பது தான் மிகவும் சிரமமான காரியம். ஆகவே ரூ.1 என்பது மாற்றப்படுவதற்கான நடவடிக்கையை சர்க்கார் எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதையெல்லாம் பரிசீலனை செய்து 'பே கமிஷன்' சில காரணங்களையும் காட்டியிருக்கிறது. ஏன் அவர்களுக்கு ரூ. 1 இன்கிரிமெண்டு இருக்கவேண்டும். செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு ஏன் ரூ. 4 இன்கிரிமெண்டு இருக்க வேண்டும் என்று காரணம் காட்டியிருக்கிறார்கள். அந்தக் காரணங்களை நாம் ஒப்புக் கொண்டிருக்கிறோம். அதை மறு பரிசீலனை செய்வதென்றால் எல்லோருக்கும் சேர்த்துத் தான் பரிசீலனை செய்ய வேண்டும். தனிப்பட்ட முறையில் ஹயர் கிரேடு, செகண்டரி கிரேடு ஆசிரியர்களைப் பற்றி மட்டும் பரிசீலனை செய்வது என்றால் நலமாக இருக்காது.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : "எழுத்தறிவித்தவன் இறைவனாவான்" என்று சொல்வதற்கேற்ப சமுதாயத்தில் பிரதான பணியைச் செய்வதற்கான பொறுப்பை ஆசிரியர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நமது அரசு ஒப்புக்கொண்டு, 'பே கமிஷன்' சிபார்சுகளை திருத்தி அமைப்பதற்கு, அவர்களுடைய சம்பள விகிதத்தை சீர்திருத்துவதற்கு, ஆசிரியர்கள் புதிய சமுதாயத்தை உருவாக்குகிறார்கள் என்ற அடிப்படையில், துரிதமாக அதை மாற்றி அமைக்க சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆசிரியர்கள் மீது அதிக பரிவு காட்ட வேண்டும், அவர்களுக்கு ஏராளமான வசதிகள் செய்து தரவேண்டும் என்ற கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் ஆசிரியர்களுக்கு மட்டும் 'பே கமிஷன்' சிபாரிசுகளை மறுபரிசீலனை செய்வதில் நாம் விதிவிலக்குத் தந்தால், மற்றவர்களும் அந்தக் கோரிக்கையை எழுப்புவார்கள். கட்டாய இலவசக் கல்வியை ஒரு வகையில் அமுல் நடத்திக் கொண்டு வருகிறோம். அதே சமயத்தில் வருமானம் குறைந்து, ஆசிரியர்களுக்கு அதிக வசதிகளைச் செய்து கொடுக்க முடியாமல் நிதி வசதி பற்றாக் குறையை சந்தித்து வருகிறோம். ஆசிரியர்களுக்கு தனியாக 'வெல்பேர் பண்டு' என்று ஏற்பாடு செய்து, அதன் மூலம் வசதிகளைக் கொடுக்கலாமா என்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

Scholarship for Mauritius students.

***427** *Q.*—**THIRU N. S. V. CHITHAN :** Will the Hon. the Minister for Education and Industries be pleased to state :—

(*a*) whether the Government propose to offer scholarships for Mauritius students in this State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) and (இ) மாரிசஸ் தீவுகளில் வசிக்கும் இந்தியர்களில், தமிழ் மொழி பேசும் மாணவர்களுக்குப் படிப்பு உதவித் தொகை வழங்குவதற்காக 1962-ம் ஆண்டில் ஒரு